DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | அபிலாஷ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பிஜூ | சமயம் | - | |
| கிராமம் | - | பழைய வால்பாறை | வயது | - | 24/2025 |
| சாதி | - | | | | |

**05-02-2025**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் ஹோம்ஸ்டேவில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 01-12-2022-ம் தேதி இரவு 08.30 மணியளவில் நான் பவின் ஹோம்ஸ்டேவில் பணியில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய போலீசார் அங்கு வந்தார்கள். அங்கு வேலைசெய்துகொண்டிருந்த மணிகண்டன் என்பவர் பின்புறத்தில் கட்டிடத்தில் இருந்து கீழே விழுந்தார் என்றும், அதில் அவருக்கு தலை காயம் ஏற்பட்டதாகவும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சொன்னர்கள். போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு மேப் வரைந்தார்கள். என்னிடம் சாட்சிகையொப்பம் கேட்டார்கள். என்னுடன் ராஜேந்திரன் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**போலீசார்என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவயிடத்தில் கட்டிட வேலை நடந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 29-11-2022, 30-11-2022 ஆகிய இரண்டு நாட்களும் அங்கு கட்டிட வேலை நடந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். இறந்த மணிகண்டன் 30-11-2022-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடம் வந்திருப்பாரா என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் மாடிக்கு செல்லவேண்டும் என்றால் என்னிடம் அனுமதிபெற்றுதான் போகவேண்டும் என்றால் சரிதான். அய்யப்பனை பார்க்கவேண்டும் என்று மணிகண்டன் என்னிடம் கேட்டபோது நான் தான் மாடிக்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். மணிகண்டனை நான் விசாரித்தபோது ஏற்கனவே அய்யப்பனிடம் வேலை பார்ப்பதாகவும், இங்கு டூரு வந்ததாகவும் சொன்னார் என்றால் சரிதான். டூரு வந்த இடத்தில் அய்யப்பன் அங்கு வேலை செய்த விவரம் தெரிந்து பார்க்கவந்ததாக என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். 29-11-2022 மற்றும் 30-11-2022 ஆகிய இரு தேதிகளிலும் மணிகண்டன் அங்கு வேலை செய்யவில்லை என்றால் சரிதான். 2-ம் எதிரி செந்தில்பாலு கட்டிட உரிமையாளர், 1-ம் எதிரி அய்யப்பன் ஒப்பந்ததாரர் என்றால் சரிதான். உயரத்தில் வேலை செய்ததால் அங்கு வேலை செய்த நபர்களுக்கு 2-ம் எதிரி கெல்மெட், மஞ்சள் நிற நைலான் கயிறு போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் 2-ம் எதிரி வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். மணிகண்டன் கீழே விழுந்தபின்பு விசாரித்தபோது அய்யப்பனிடம் மணிகண்டன்

பேசிக்கொண்டிருந்தபோது வலிப்புவந்து கீழே விழுந்துவிட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்ட பின்பு என்னை காவல் நிலையம் அழைத்துஅங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :

போலீசார் விசாரணையில் மணிகண்டன் சென்டிரிங் வேலை செய்துகொண்டிருந்ததாகவும், அப்போது 20 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து விட்டதாக கூறியுள்ளேன் என்றால் இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை ஓய்வு |
| பெயர் | - | ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பழனியாண்டி | சமயம் | - | |
| கிராமம் | - | சோலையார் எஸ்டேட் | வயது | - | 64/2025 |
| சாதி | - | | | | |

**05-02-2025**

**( 1,2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சோலையார் எஸ்டேட்டில் கூலி வேலை செய்து ஓய்வுபெற்று வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் என்பவரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30-11-2022-ம் தேதி மதியம் 12.00 மணியளவில் அய்யப்பனை தேடி மணிகண்டன் என்பவர் பவின் காட்டேஜில் நான் வேலை செய்த இடத்திற்கு வந்தார். அவர் என்னிடம் கேட்டபோது பின்புறம் வேலை செய்துகொண்டிருப்பதாகவும் அங்கு சென்று அய்யப்பனை பார்க்கும் மாறு கூறினேன். பின்னர் 10, 15 நிமிடம் கழித்து மணிகண்டன் மாடியில் இருந்து சாரம் கட்டியிருந்த இடத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார். அவர் அங்கு வேலைசெய்யவில்லை அவரை வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் இரவு 08.00 மணியளவில் வால்பாறை போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் வேறு யாரு கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு நினைவில் இல்லை **(பார்வை மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

பவின் காட்டேஜில் கட்டிட வேலை நடந்துகொண்டிருந்ததால் அங்கிருந்த பொருட்களுக்கு பாதுகாப்பாக வாட்சுமேன் வேலை செய்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். அங்கு வேலை செய்த நபர்கள் தங்கி வேலை செய்தார்கள் என்றால் சரிதான். அங்கு தங்கியிருந்தவர்கள் காலை 08.00 மணிக்கு கட்டிட வேலையை ஆரம்பித்துவிடுவார்கள் என்றால் சரிதான். மணிகண்டன் என்பவர் அங்கு தங்கியிருந்தாரா என்றால் இல்லை. அன்றைய தினம் 12.30 மணியளவில் தான் அங்கு வந்தார். கட்டிட வேலை செய்த நபர்களுக்கு கட்டிட உரிமையாளரான 2-ம் எதிரி செந்தில்பாலு கயிறு ெஹல்மெட் போன்றவை வாங்கி கொடுத்திருந்தார் என்றால் சரிதான். ெஹல்மெட் போட்டுக்கொண்டுதான் அங்கு வேலை செய்தார்கள். போலீஸ் சம்பவயிடத்தை பார்வையிட்டு போலீஸ் ஸ்டேசனுக்குஅழைத்து அங்கு வைத்து கையொப்பம் என்னிடம் வாங்கினார்கள் என்றால் சரிதான். மணிகண்டன் எப்படி கீழே விழுந்தார் என்று நான் விசாரிக்கும் போது வலிப்பு வந்து கீழே

விழுந்துவிட்டதாக சொன்னார்களா என்றால் ஆமாம் அந்த சமயத்தில் ஓனர் அங்கு இல்லை. இந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :

போலீசார் விசாரணையில் மணிகண்டன் சென்டிரிங் வேலை செய்துகொண்டிருந்ததாகவும், அப்போது 20 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து விட்டதாக கூறியுள்ளேன் என்றால் இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.